பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.லி

மலர்: 16] சென்னை: ஐப்பசி 23 (8—11—68) வெள்ளி ★ வெளியூர்: ஐப்பசி 24 (9—11—68) சனி [இதழ்: 119

இந்தியாவுக்கு மணிலா அரிசி

மணிலா, நவ. 7—

பிலிப்பைனிலிருந்து அடுத்த வாரத்தில் இந்தியாவுக்கு 15,000 டன் அரிசி ஏற்றுமதியாகும்.

1968-ம் ஆண்டு இறுதிக்குள் 25,000 டன் அரிசி அனுப்புவதாக ஒப்புக்கொண்டுள்ளபடி இது அனுப்பப்படுகிறது.

ஏற்கனவே 10,000 டன் அனுப்பப்பட்டுள்ளது.

குன்கா நகரில் 'கோட்சே'க்கள்!

காந்தியாரின் மதுவிலக்குக் கொள்கைக்குக் கோட்சே'க்களாக வந்து வாய்த்துவிட்ட காங்கிரசுக்காரர்கள், கோவாவில், அனைத்திந்திய மாநாடு நடத்தியிருக்கிறார்கள்.

காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவை வரவேற்க வழி நெடுகிலும் கட்டப்பட்டிருந்த வளைவுகளில் பல, சாராய விளம்பரங்களைத் தாங்கிக் கொண்டிருந்தனவாம்!

"உலகக் குடிகாரர்களே—ஒன்றுபடுங்கள்; பாட்டிலைத் தவிர நீங்கள் இழக்கப்போவது எதுவுமில்லை" என்று எழுதி, பனஜியிலிருந்து குன்கா நகர்வரை செல்லும் பாதையில் தொங்கவிட்டிருந்தார்களாம்!

தங்க இடம் கிடைக்காமல் பல உறுப்பினர்கள் திண்டாடிக்கொண்டிருந்தபொழுது, காமராசர், நிஜலிங்கப்பா போன்ற 'சிண்டிகேட்' உறுப்பினர்கள் தங்குவதற்காக ஒரு பெரும் செல்வந்தர் வீட்டில் ஏற்பாடுகள் செய்திருந்தார்களாம்!

—ஆதாரம்: 'டெக்கான் ஹெரால்டு'; 'நவ பாரத் டைம்ஸ்'

பரம்பிக்குளம் உடன்பாடு

நம்பூதிரிபாடு தகவல்

திருவனந்தபுரம், நவ 8—

"பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் சம்பந்தமாகவும், பரம்பிக்குளத்தில் மீன் பிடிப்பது, படகு விடுவது சம்பந்தமாகவும் தமிழக அரசுடன், கேரள அரசு ஒருவித உடன்பாடுக்கு வந்திருக்கிறது"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"இந்த உடன்பாட்டுக்கு கூடிய விரைவில் இறுதி உருக் கொடுக்கப்படும்" என்றும் அவர் கூறினார்.

"பெரியாற்று ஏரித் தண்ணீரை தமிழ்நாடு பயன்படுத்துவதால் தேக்கடி புகலிடத்தைச் சேர்ந்த ஏரியில் தண்ணீர் பற்றுக்குறை எதுவும் இல்லை"

என்றும் முதலமைச்சர் நம்பூதிரிபாடு தெரிவித்தார்.

அவசரச் சட்டத்தை எதிர்த்து 'ரிட்' மனு

தலைமை நீதிமன்றத்தில் தள்ளுபடி

புதுடில்லி, நவ, 7—

"மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் வகையில் குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசரச் சட்டம் அரசியல் சட்டத்துக்கு முரணானது" என்று குடுப்பிட்டு, 'அது செல்லாது' எனத் தீர்ப்பளிக்கக் கோரி, பாதுகாப்புத் துறை சிவிலியன் ஊழியர்கள் சங்க உறுப்பினர் திரு. சந்தோக்சிங் என்பவர் தாக்கல் செய்த 'ரிட்' மனுவை, தலைமை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்துத் தள்ளுபடி செய்தது.

அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளான பேச்சுரிமை, கருத்தறிவிக்கும் உரிமை, அமைதியாகக் கூடும் உரிமை, சங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமை ஆகியவைகளைக் குலைக்கும் வகையில், அவசரச் சட்டம் இருப்பதாக மனுதாரரின் வழக்கறிஞர் வாதாடினர்.

"அரசியல் சட்டத்தில், வேலை நிறுத்தம் செய்வது அடிப்படை உரிமையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதா?' என்று நீதிமன்றம் அவரைக் கேட்டது.

தலைமை நீதிபதி இதயதுல்லா, மற்றும் நீதிபதிகள் பகவத், மித்தர் ஹெக்டே ஆகியோர் அமர்ந்து இந்த மனுவை ஆராய்ந்தனர்.

எந்தத் தொழிற்சாலையும் மூடப்படவில்லை

கேரள அமைச்சர் விளக்கம்

"இப்போதுள்ள அரசு பதவி ஏற்றதற்குப் பின், கேரளத்தில் எந்தத் தொழிற்சாலையும் மூடப்படவில்லை; எந்தத் தொழிற்சாலையும் மாநிலத்திற்கு வெளியே வேறு எந்த இடத்திற்கும் மாற்றப்படவில்லை"

என்று கேரளக் கைத் தொழில் அமைச்சர் டி. வி. தாமஸ், சட்டமன்றத்தில் கூறினார்.

ஒரு காங்கிரசு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் மேற்கண்டவாறு பதில் கூறினர்.

உடல் நலம் தேறியது அறிந்து மகிழ்ச்சி

அறிஞர் அண்ணாவுக்கு இந்திரா காந்தி மடல்

புதுடில்லி, நவ. 7—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலம் தேறி, அமெரிக்காவிலிருந்து தாயகம் திரும்பியுள்ளதையொட்டித் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், அண்ணா அவர்கட்கு எழுதியுள்ள மடலில் தெரிவித்திருப்பதாவது:—

"நியூயார்க் மருத்துவமனையில் தங்களுக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை நடந்து அதன் பின்னர் தங்களுடைய உடல் நிலையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு வருவதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

"உங்களுடைய நோய் அகன்று உறுதியாக உடல் தேறி வருவது எனக்கு ஆறுதலும், நிம்மதியும் அளிக்கிறது.

"இனியும் தங்களுடைய உடல் நிலையில் தொடர்ந்து கவனம் செலுத்துவது அவசியம். உடல் நலம் சீராக வளமுறுவதில் அக்கறை கொள்வீர்கள் என நம்புகிறேன்."

பிராவிடண்ட் நிதி நிலுவை

வசூலிப்பதற்கு கடும் நடவடிக்கை

புதுடில்லி, நவ. 8—

வருமான வரி ஏமாற்றுபவர்கட்கு விதிக்கப்படுவதுபோல், பிராவிடண்ட் நிதிக்குரிய தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறுபவர்கட்கும் கட்டாயமாகச் சிறைத் தண்டனை விதிக்க வகை செய்வது பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது.

தொழிலாளர் சேமிப்பு (பிராவிடண்ட்) நிதியின் மத்திய பொறுப்புக் கழகம் இந்த யோசனையை மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் சேமிப்பு நிதி செலுத்தப்படாமல் இருந்த தொகை 1967 மார்ச்சு 31-ம் நாள் ரூ. 5.96 கோடியாக இருந்தது; 1968 மார்ச்சு 31-ம் நாள் அது ரூ. 8.17 கோடியாக உயர்ந்துவிட்டது.

"இதனை வசூலிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் இந்தி எதிர்ப்பு மறியல்

தொண்டர்கள் கைதாகி விடுதலை

திருவனந்தபுரம், நவ. 7—

இன்று காலை நகரில், பட்டம் என்ற இடத்தில் பள்ளிக்கூடத்திற்கு முன்பு மறியல் செய்த இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் தலைவரும், இரண்டு செய்தியாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

பள்ளிக்கூடத்தில் இந்தியைப் பாட மொழியாக ஆக்கியதையும், 'வட இந்திய பாணியில் உடைகளை அணியும்படி மாணவர்களைக் கட்டாயப்படுத்துவதையும், எதிர்த்து அவர்கள் மறியல் செய்தனர்; பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

1964-ல் இந்தப் பள்ளிக்கூடம் தொடங்கியதிலிருந்தே இந்தி பாட மொழியாக இருந்துவருவதாகப் பள்ளிக்கூட பிரின்சிபால் கூறினர். சீருடையிலோ அல்லது பாட மொழியிலோ அண்மையில் மாறுதல் எதுவும் செய்யவில்லை. சென்ற நான்காண்டுகளாக நடைமுறையில் உள்ள ஓர் ஏற்பாட்டை இப்போது சிலர் திடீரென்று எதிர்ப்பது எதனால் என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறினர்.

'தடுப்புக் காவல் சட்டம் தவறுகப் பயன்படுத்தப்பட்டது'

தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பு

புதுடில்லி, நவ. 7—

"சாதாரணமான சூழ்நிலையில் தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாது" என்று தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்கு வங்க அரசினுல் தடுப்புக் காவல் சட்டப்படி காவலில் வைக்கப்பட்டுள்ள புஷ்கர் முகர்ஜி மற்றும் 15 பேர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஹேபியஸ் கார்பஸ் மனுவின் மீது தீர்ப்பளிக்கையிலேயே மேற்கண்டவாறு தலைமை நீதிமன்றம் கருத்தறிவித்தது.

அவர்களை விடுதலை செய்ய நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

"எந்தச் சட்டமாவது மீறப்படுமானுல், அது பொது ஒழுங்கைப் பாதிக்கும்; அதனுல் மக்கள் சமுதாயமே பெரும் அளவில் பாதிக்கப்படும்.

"தனிப்பட்டவர்கள் தாக்கப்படுவார்களானுல், அமைதி குலைவுக்கு வழி ஏற்படும் என்றுலும் அது, பொது ஒழுங்கைக் குலைப்பதாகாது; எனவே, மேற்சொன்ன வகையான வழக்குகளில் சாதாரண கிரிமினல் சட்டங்களையே கையாள வேண்டும்"

என்று தலைமை நீதிமன்றம் கருத்தறிவித்தது.

நீதிபதி திரு. இராமசாமி, தமது தீர்ப்பில் மேலும் கூறியதாவது:—

"தடுப்புக் காவல் சட்டப்படி காவலில் வைக்கப்பட்ட சிலர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு முறையானவையல்ல.

"பொது ஒழுங்குக்குப் பாதகம் ஏற்படக்கூடிய குற்றம் எதையும் அவர்கள் செய்யக்கூடும் என்றும் சொல்வதற்கில்லை."

"சிலர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் தெளிவற்றவையாக உள்ளன" என்றும் நீதிபதி சுட்டிக் காட்டினர்.

'குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கக்கூடிய அளவில் ஆதாரங்கள் காட்டப்படவில்லை" என்றும் நீதிபதி கூறினர்.

நீதிபதிகள் இராமசாமி, ஷா, குரோவர் ஆகிய மூவரும் சேர்ந்து இந்த மனுவை ஆராய்ந்தனர்.

அமைதியைக் குலைக்கும் இஸ்ரேல்

ரஷ்யாவின் குற்றச்சாட்டு

மாஸ்கோ, நவ. 8—

"மத்தியக் கிழக்கில் உடன்பாடு ஏற்படுவதற்கு இஸ்ரேல் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டால், அதனுல் ஏற்படக்கூடிய விளைவுகள் கடுமையாக இருக்கும்"

என்று இரஷ்யா, இஸ்ரேலை மிரட்டியுள்ளது.

"சமாதானம் காண்பதற்கான முயற்சிகளுக்கு இஸ்ரேல் வேண்டுமென்றே உலைவைக்கிறது" எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

வைகையில் வெள்ளம்!

குடிசைகள் பாதிப்பு

மதுரை, நவ. 8—

வைவை நீர்ப் பிடிப்புப் பகுதியில் கடும் மழை பெய்ததன் விளைவாக வைகையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

இரு கரைகளிலும் இருந்த குடிசைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

கரிமேடு, செல்லூர்ப் பகுதிகளில் சுமார் 500 குடும்பங்கள் குடிசை இழந்து தவிக்கின்றன.

இலங்கை 'அகதி'கள் அந்தமானுக்கு அனுப்பப்படுவர்

10,000 குடும்பங்களைக் குடியமர்த்தும் திட்டங்கள் உருவாகின்றன

தேசியப் பிரச்சினையாக மதித்துச் செயல்பட மத்திய அரசு முயற்சி

சென்னை, நவ. 8—

இலங்கையிலிருந்து வரும் இந்திய அகதிகளை அந்தமானில் குடியமர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வந்த இந்திய அரசின் குழு, 'அங்கு ஒரு நிலக் குடியேற்றத் திட்டமும், ரப்பர் தோட்டமும் ஏற்படுத்தி, அவற்றில் சுமார் 10,000 குடும்பங்களை ஈடுபடுத்தலாம்' என்று சிபாரிசு செய்திருக்கிறது.

இந்த அகதிகளின் முதல் குழு, வரும் சூன் திங்களில் அங்கு போய்ச் சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அரசு இதை ஒரு தேசியப் பிரச்சினையாக மதித்து, பல திட்டங்களுக்கு நிதியுதவ முன்வந்திருக்கிறது.

லால்பகதூர் சாஸ்திரி—பண்டாரநாயகா ஒப்பந்தப்படி 15 ஆண்டுக்காலத்தில் சுமார் 5,25,000 இந்தியர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

'இர்வின்' என்ற கப்பல் 1969 சூனிலிருந்து 300 பேர் வீதம் வாரத்துக்கு இருமுறை அகதிகளை ஏற்றிக்கொண்டுவரும்.

இவர்கள் தனுஷ்கோடிக்குக் கொண்டுவரப்பட்டு — அங்கிருந்து மண்டபம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்; மண்டபம் முகாமில் ஒரே சமயத்தில் 1,000 பேர் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

துவக்கத்தில் மாதமொன்றுக்கு தலா ரூ. 75 ரொக்க உதவி அளிக்கப்படும்; இந்த ரொக்க உதவி எத்தனைக் காலத்துக்கு அளிப்பது என்பது பற்றி இன்னும் முடிவாகவில்லை. பர்மா அகதிகளுக்கு 7 மாதங்களுக்குக் கொடுத்துவந்தார்கள்.

தமிழக அரசு திட்டம்

இலங்கை அகதிகளுக்காகத் தமிழக அரசு ஐந்து திட்டங்கள் தயாரித்திருக்கிறது; சிலவற்றிற்கு மத்திய அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துவிட்டது.

நீலகிரியில் 3750 ஏக்கரில் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்படும். இதற்கு ரூ. 4.5 கோடி செலவாகும். இந்தத் தோட்டங்கள் முழுதும் அபிவிருத்தி செய்யப்பட்டபின், 5,000 பேருக்கு பிழைப்பு அளிக்கும்.

கன்னியாகுமரியில் ஒரு கோடி ரூபாய் செலவில் சுமார் 2,000 ஏக்கரில் ரப்பர் தோட்டங்கள் ஏற்படும்; இதில் 1,000 பேர் மறுவாழ்வு பெற முடியும்.

திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு அருகில் திருவரங்குளம் பகுதியில் 3,000 ஏக்கர் நிலத்தில் 6,000 குடும்பங்கள் குடியமர்த்தப்படுவர்.

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை தாலுகாவில் ஓ. புதூர் கிராமத்திலும் 1,200 ஏக்கர் நிலத்தில் மேலும் 300 குடும்பங்கள் குடியமர்த்தப்படும்.

இவற்றைத் தவிர, தொழில் நடத்துவதற்கு ரூ. 800 முதல் ரூ. 2,000 வரை கடனுதவப்படும்; இந்தக் கடனை அவர்கள் 9 ஆண்டுகளில் திருப்பித் தர வேண்டும்.

இலங்கை அகதிகளின் குடியிருப்பு வசதிக்கும் ஒரு திட்டம் தயாராகியுள்ளது. இதற்காக, கிராமப் பகுதிகளாக இருந்தால் ரூ. 2,000 வரையிலும், நகர்ப்புறங்களாக இருந்தால் ரூ 4,500 வரையிலும் கடன் உதவப்படும்.

அரசு நிறுவனங்களில் அகதிகளுக்கு ஓரளவுக்குக் காலி இடங்களை ஒதுக்குவது குறித்தும் தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

மாநிலத்திலுள்ள கைத்தொழில் பயிற்சிக் கழகங்களில் இலங்கை, பர்மா அகதிகளுக்காக 5-சதவிகித இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

புருக் காலில் கடிதம்!

புதுடில்லி நிறுவனத்தின் ஏற்பாடு

புதுடில்லி, நவ. 7—

அஞ்சல் -- தந்தித் துறையை நம்புவதைவிட, பண்டைக்கால செய்தித் தூதுவர்களான புருக்களையே நம்பலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது புதுடில்லி நிறுவனம் ஒன்று!

இந்த நிறுவனத்துக்குச் சொந்தமான பால் பண்டத் தொழிற்சாலை, உ. பி. மாநிலத்தில், 'எடா' என்ற இடத்தில் உள்ளது.

டில்லிக்கும் இந்த இடத்துக்கும் உள்ள தொலைவு 125 மைல்கள்தான்; ஆனால், டில்லியிலிருந்து அனுப்பப்படும் தந்தி எடாவுக்குப் போய்ச் சேர மூன்று நாட்கள் பிடிக்கின்றனவாம்; புருக்கள் மூலம் செய்தி அனுப்பினால் 11-மணி நேரம் போதுமாம்.

புருக்களை வாங்கி அவற்றைப் பழக்குவதற்கு ஒரு நிபுணரையும் நியமிக்க அந்த நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளதாம். ஆனால், அஞ்சல் --- தந்தித் துறையினர் இந்த ஏற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடுமோ என அந்த நிறுவனத்தார் கவலைப்படுகின்றனராம்.

அரசியல்வாதிகட்கு வேண்டாம் இந்த வேலை!

ஆச்சாரியா துளசி அறிவுறுத்தல்

சென்னை, நவ. 7—

"இந்த நாட்டின் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை மொழி வல்லுநரிடம் விடவேண்டும்"

என்று அணுவிரத இயக்கத் தலைவர் ஆச்சாரியா துளசி, அரசியல்வாதிகட்கு அறிவுறுத்தினார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்,

"நாடு விடுதலை பெற்று இருபது ஆண்டுகட்குப் பிறகும் மொழிப் பிரச்சினை தீரவில்லை என்றால் அதற்குக் காரணம், மொழி வெறிதான்"

என்றார் அவர்.

பொருளாதார வளர்ச்சியில் இளைஞர்கள் பங்கு

அமைச்சர் நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

சென்னை, நவ. 8—

"பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுவது ஒரு வழி என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது; எவ்வாறு திட்டமிடுவது என்பது பற்றிப் பல கருத்துக்கள் இருக்கக் கூடும்; ஆகவே, நான்காவது திட்ட அணுகுமுறை குறித்து விவாதமும், விமர்சனமும் செய்வதை வரவேற்கிறேன்"

என்று கல்வி – தொழில் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்.

தென்னிந்திய தொழில் -- வர்த்தகக் கழகம், கல்லூரி மாணவர்களிடையே பேச்சு -- கட்டுரைப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது; அமைச்சர் நெடுஞ்செழியன் அதற்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் மேலும் விளக்கியதாவது :—

"நான்காவது திட்டம் சம்பந்தமான எல்லா அம்சங்கள் குறித்தும், இளைஞர்களுக்கு அக்கறை உண்டாக்குவதற்கான நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுதலுக்கு உரியவை; ஏனென்றால், இந்தியாவில் திட்டமிடுவது பற்றித் தாங்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை இளைஞர்கள் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

"மாணவர்களுக்கும் -- ஆசிரியர்களுக்குமிடையே நல்லுறவு நிலவ வேண்டியது அவசியம்; அதேபோல், மாணவர்களுக்கும் -- வர்த்தகர்களுக்குமிடையே தொடர்பு இருப்பதும் அவசியம்; மாணவர்கள், தொழில் மற்றும் வர்த்தகம் பற்றிய நடைமுறை அம்சங்களை நன்கு அறிந்துகொள்வதற்கு இது உதவும்; மாணவரிடையே திறமைசாலிகளைக் கண்டுபிடித்து, தொழில்துறையின் நலனுக்காக அவர்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கும் இது உதவும்."

போட்டிகளில் வெற்றியடைந்தவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

காந்தீயத்துக்கும் -- காங்கிரசு அமைச்சர்கட்கும் காத தூரம்!

பனாஜி, நவ. 7—

"காந்தியடிகளின் கொள்கைகளையும், இலட்சியங்களையும் காங்கிரசுக்காரர்கள் மறந்துவிட்டனர்: மத்திய அரசிலும் சரி – மாநில அரசுகளிலும் சரி -- இப்போதுள்ள அமைச்சர்களில் எவரும் காந்தீயவாதிகள் அல்லர்!"

என்று காங்கிரசு மாநாட்டில், மத்திய அமைச்சர் பேராசிரியர் வி. கே. ஆர். வி. ராவ் குறிப்பிட்டபோது, சிலர் முகத்தைச் சுளுக்கி முணுமுணுத்தனர்; என்றாலும் அவர் தொடர்ந்து தமது கருத்தை வெளியிட்டபோது குறிப்பிட்டதாவது :—

"இதை நான் தவறான எண்ணத்துடன் சொல்லவில்லை; உண்மையை அப்படியே சொல்லுகிறேன். காந்தீயவாதியாகவும் அமைச்சராகவும் ஒரே சமயத்தில் இருப்பது சுலபமானதல்ல."

காந்தி நூற்றாண்டு விழாப் பற்றிய தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் திரு. வி. கே. ஆர். வி. ராவ் கலந்துகொண்டு பேசினார்.

கடந்த 16-ஆண்டுகளுக்குமேல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் விபூதி மிஸ்ரா (பீகாரைச் சேர்ந்தவர்) கூறியதாவது :—

"அமைச்சர்கள் காந்தீயத்தைப் பின்பற்றவில்லை என்றும், மக்களுக்குக் காந்தியின் போதனைகளை எடுத்துச் சொல்லிப் பின்பற்றுமாறு கூறவில்லை என்றும் கூறுவதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. நான் என் வாழ்க்கையில் காந்தீயத்தையே பின்பற்றி வருகிறேன்; இனியும் பின்பற்றுவேன்.

"நான் அமைச்சராகவில்லை. காந்தீயத்தைப் பின்பற்றாதவர்களால்தான் அமைச்சராக வர முடியும்."

இந்தியாவில் சனநாயகம் சரிவரச் செயல்படத் தவறினால்...!

புதிய அமெரிக்க அதிபரின் தீவிரக் கண்ணோட்டம்

வறட்சி நிலைமைகளை நினைவிலிருத்துகிறார்

வாஷிங்டன், நவ. 8—

"இந்தியாவில் சனநாயகம் சரியாகச் செயல்படத் தவறினால், அது, உலகம் முழுவதிலும் பெரும் விளைவுகளை உண்டுபண்ணக் கூடிய பேரபாயமாக விளங்கக்கூடும்.

"50 கோடி மக்கள் உள்ள ஒரு நாடு, அடிப்படைச் சுதந்தரங்களைத் தியாகம் செய்யாமல் முன்னேறுவதற்கான வழிகளைக் காண முயன்று கொண்டிருக்கிறது என்பதுதான், அமெரிக்கக் கொள்கையின் கண்ணோட்டத்திலிருந்து அறியப்படும் முக்கியமான அம்சமாகும்.

"கம்யூனிஸ்டுச் சீனா வெற்றி பெற்று உலகில் மிகப் பெரிய சனநாயகம் தோல்வியடையுமானால், அது பேரபாயமாகும்!

'இந்தியாவில் சனநாயகம் தோல்வியடையாமல் இருக்க, அதற்கு அமெரிக்கா தொடர்ந்து பொருளாதார உதவிகள் அளித்து வர வேண்டும்; துரிதமாக அபிவிருத்தியடைவதற்காக இந்தியா, தன்னுடைய வழிகளைத் தக்கபடி மாற்றிக் கொள்ளச் செய்ய அமெரிக்கா முயலவேண்டும்"

என்று, புதிதாக அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரிச்சர்டு நிக்சன் கருதுவதாக அவருடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து அந்நிய உதவியை அளித்து வரவேண்டும் என்றும், தன்னுடைய வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய மாறுதல்களைச் செய்யும்படி இந்தியாவை இணங்க வைக்க வேண்டும் என்றும் நிக்சன் கூறியிருக்கிறார்.

மூன்று மாதத்துக்கு ஒருமுறை வெளிவரும் அயல்நாட்டு விவகார சஞ்சிகையின் (1967 அக்டோபரில்) ஒரு கட்டுரையில், இந்தியாவை, 'பிரமிக்க வைக்கும் ஒரு மிகப் பெரிய நாடு' என்று அவர் வர்ணித்துள்ளார்.

"அந்த நாடு எவ்வளவோ சாதிக்க முடியும்; ஆனால், அதன் சாதனைகள் அந்த அளவுக்கு இல்லாமல் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது" என்றார்.

இந்தியாவின் விவசாய--தொழில் -- பொருளாதார முன்னேற்றம் பற்றி பலர் குறை கூறிய போதிலும், 'சென்ற ஐந்து ஆண்டுகளில் இந்தியா இரண்டு போர்களில் ஈடுபட வேண்டியிருந்தது என்பதையும், இரண்டு பெரிய வறட்சி நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்' என்று நிக்சன் கூறியுள்ளார்.

"மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதிலும், விவசாயத் துறையிலும் முன்னேற்றம் காண இப்போதைய இந்தியத் தலைவர்கள் முயன்று வருகின்றனர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத் திட்டக் குழு

அரசுப் பண்ணைகளைப் பார்வையிடும்

காஞ்சிபுரம், நவ. 7—

தமிழக அரசு, திட்டக் குழு ஒன்றை அமைத்திருக்கிறது; அரசு திட்ட வேலைகளையும் அதன் அமைப்புச் செயல் முறைகளையும் இக்குழு பரிசீலிக்கும். திருவாளர்கள் பி. ஜி. கருத்திருமன், எஸ். எம். துரைராசு, அ. பொ. அரசு உட்பட 20 சட்டமன்ற உறுப்பினர்கள் இக்குழுவில் உள்ளனர்.

இத்திங்கள் 12, 13 ஆகிய நாட்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில் இக்குழு சுற்றுப்பயணம் செய்யும்.

நவ. 12-ம் நாள் திருவூர்க்குப்பம் கிராம விவசாயப் பண்ணை, பூண்டி நீர்த்தேக்கம், கடம்பத்தூர் விவசாயப் பண்ணை முதலியவற்றைப் பார்வையிடும்.

நவ. 13-ம் நாள் காஞ்சிபுரத்தில் மண்வளப் பரிசோதனை நிலையம், விவசாயப் பண்ணை, அரிசன நல விடுதி ஆகியவற்றைப் பார்வையிடும்.

பிறகு, காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டத் திட்டப் பணிகளைப் பார்வையிடுகிறது.

இக்குழு ஓர் அறிக்கை தயாரித்து, அரசுக்கு அளிக்கும்.

பாண்டிச்சேரி நகராட்சித் தேர்தல்

டிச. 16-ல் வாக்குப் பதிவு

பாண்டிச்சேரி நகராட்சித் தேர்தல்கள், டிசம்பர் 16-ம் நாள் நடைபெறும்.

வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதி நாள் : நவ. 14.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் இறுதி நாள் : நவ. 18.

வாக்குப் பதிவு நாள் : டிச. 16.

வாக்குகள் எண்ணிக்கை நாள் : டிச. 24.

கடன் தொல்லையிலிருந்து விவசாயிகட்கு விடுவிப்பு

விளைபொருட்களை நல்ல விலை பொருளாக்க உதவி

பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு -- ஏற்றுமதி வாணிபத்திலும் ஈடுபாடு

இந்தியாவைப் போன்று பயிர்த் தொழிலையே முக்கியமாகக் கொண்ட ஒரு நாட்டில் விளைபொருள்களை நல்ல முறையில் விற்பனை செய்வதுதான் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியவழியாக இருக்கும்.

விளைபொருள் உற்பத்தி பெரும் அளவில் இருக்க வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு நியாயமான விலை பெறும் பொருட்டு நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும்.

விளைபொருள் விலை இலாபகரமாக இருக்கும்பொருட்டுக் கூட்டுறவுத் துறையில் விளைபொருள் விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இடைத்தரகர்களும், கடன்காரர்களும் கொடுக்கும் தொல்லைகளிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்காக இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உயர் நிலையில் தேசியக் கூட்டுறவு விவசாய விற்பனைக் கழகம் ஒன்று இயங்குகிறது. இதைத் தவிர மாநிலங்களில் 26 மத்திய விற்பனைச் சங்கங்கள் இயங்கிவருகின்றன.

மாவட்டங்களில் 162 விற்பனைச் சங்கங்களும், சுமார் 3,000 துவக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்குகின்றன.

இந்த விற்பனைச் சங்கங்கள் விளைபொருட்களை வாங்கி, விவசாயிக்கு இலாபகரமான விலைகளில் விற்பனை செய்கின்றன.

அண்மைக் காலம் வரையில் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள விளைபொருள்களை அந்தந்தப் பகுதிகளிலேயே விற்பனை செய்துவந்தன; ஆனால் இப்போது இவற்றின் அலுவல்கள் விரிவடைந்திருக்கின்றன; மாநிலங்களுக்கிடையே விளைபொருள்களை விற்பனை செய்வதிலும், விளைபொருள்களை ஏற்றுமதி செய்வதிலும் இவை ஈடுபட்டிருக்கின்றன.

1966—67-ம் ஆண்டில், 14 மத்திய விற்பனைச் சங்கங்களைத் தவிர 12 மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களும், 32 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து 10 கோடியே 90 இலட்ச ரூபாய் மதிப்புக்கு மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தில் ஈடுபட்டன. 1963—64-ல் இருந்த வர்த்தகத்தைப்போல் இது சுமார் 10 மடங்கு அதிகமாகும்.

விலைகளின் ஏற்றத்தாழ்வுகளைச் சரிக்கட்டும்பொருட்டு நிதி நிறுவனம் ஒன்றுக்கு அரசு பணம் கொடுத்து வருகிறது; இதன் பலனாக, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை வலுப்பெற்றிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் விளைபொருள்களைப் பெரும் அளவில் வாங்கி வைத்துக் கொள்கின்றன. அந்த மாநிலத்துக்கு வெளியே உரிய நேரத்தில் அவை இவற்றை விற்பனை செய்கின்றன.

அண்மை ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதி வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளன; வாழைப் பழம், கொப்பரை, வெங்காயம், கனி வகைகள், கறிகாய்கள், பருப்பு வகைகள் ஆகியவை முக்கியமாய் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1966—67-ல் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு விளைபொருள்களை ஏற்றுமதி செய்தன; 1965—66-ல் இது, 95 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாயாக இருந்தது.

பிரிட்டன், இலங்கை, குவாய்த், மொரிஷியஸ், சோவியத் யூனியன், இத்தாலி, டென்மார்க், சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற பல நாடுகளுக்கு விளைபொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்திலும், ஏற்றுமதி வர்த்தகத்திலும் ஈடுபட்டிருப்பது கூட்டுறவு இயக்கத்தையே வலுப்படுத்தி இருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் முயற்சியினால், சாகுபடியாளர்களுக்குத் தங்கள் விளைபொருள்களுக்காக நல்ல விலை கிடைக்கிறது. நமது விவசாய வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

திருவில்லிபுத்தூரில் காங்கிரசார் வெறிச் செயல்

கழகத் தோழர்கள் தாக்கப்பட்டனர்

திருவில்லிபுத்தூர், நவ. 1—

திருவில்லிபுத்தூர் மதுரை நெடுஞ்சாலையில் (இராமகிருட்டிணபுரம்—பன்னீர்செல்வம் நிலையம் அருகே) 28—10—68 இரவு 10-30 மணியளவில் தொலைபேசிமூலம் சென்னை மாநகராட்சித் தேர்தல் முடிவுகளை அறியக் கழகத் தோழர்களும், அனுதாபிகளும், பொதுமக்களும் குழுமியிருந்தனர்; அதுபோது அவ்வழியே வெடிகளை வெடித்துக்கொண்டும், தமிழக அமைச்சர்களையும் கழகத் தலைவர்களையும் தாறுமாறாகப் பேசிக்கொண்டும் 50-க்கு மேற்பட்ட காங்கிரசுக்காரர்கள் வந்தனர்; அவர்கள் அங்கே நின்றுகொண்டிருந்த 9-வது வட்ட நகர்மன்ற உறுப்பினர் சு. சோமசுந்தரம் என்பவரை அடித்து நொறுக்கி, சட்டை, பனியனைக் கிழித்து எறிந்தனர்.

இது சம்பந்தமாகச் சோமசுந்தரமும், இன்னும் சிலரும் நகரக்காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

அடுத்து மு. கந்தவேல் என்பவர் சாத்தூர் சாலையிலுள்ள செல்வம் தேநீர் விடுதியில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்; அதுசமயம் அவ்வழியே வெறித்தனமாக ஏராளமான காங்கிரசுத் தோழர்கள் திரண்டு வந்து வன்முறைச் செயலில் ஈடுபட்டு -- சீதரன் என்ற காங்கிரசுத் தொண்டரைத் தூண்டிவிட்டு -- கழகத் தோழர்கள் கந்தவேல், மொய்தீன் பிச்சை ஆகியோரையும் அடித்து நொறுக்கினர்.

தகவல் அறிந்த நகர் காவல் நிலைய அதிகாரி கிருட்டினன் விரைந்து சென்று சீதரனைக் கைது செய்தார்.

கழகத் தோழர்கள் மு. கந்தவேல், மொய்தீன் பிச்சை ஆகிய இருவரையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

இது சம்பந்தமாக சீதரன்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது; அவரை 15-நாட்கள் காவலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணை திருவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

தமிழக அரசின் பரிசுச் சீட்டுகள் விற்பனை மும்முரம்

மேலும் ஒரு வரிசை வெளியிடப்படும்

சென்னை, நவ. 8—

தமிழக அரசு பரிசுச் சீட்டுகள், தமிழ்நாடு முழுவதும் மும்முரமாக விற்பனையாகின்றன.

தமிழக அரசின் இரண்டாவது பரிசுச் சீட்டுக் குலுக்கல், இம் மாதம் 20-ம் நாள் நடைபெறும்; இந்தக் குலுக்கலுக்காக இதுவரையில் ஐ, ஜே, கே, எல், எம், என், ஓ, பி, கியூ, ஆர், ஆகிய 10 வரிசைகள் (வரிசை ஒன்றுக்கு ரூ. 10 இலட்சம்) வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் ஒரு வரிசை ('எஸ்') வெளியிடுவதுபற்றி அரசு ஆலோசித்துவருகிறது; பரிசுச் சீட்டுகள் முன்பு எதிர்பார்த்ததைவிட அதிக விறுவிறுப்புடன் விற்பனை ஆவதே இதற்குக் காரணம்.

தமிழ்நாட்டிலேயே, சென்னை நகரில் மிக அதிக அளவுச் சீட்டுகள் (ரூ. 18-இலட்சத்துக்கு) விற்பனை ஆகியுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு விற்பனை ஆகியுள்ளன என்ற விவரம் வருமாறு:—

சென்னை	18,04,000
கோவை	6,46 000
தஞ்சை	6,38,000
மதுரை	6,10,000
திருச்சி	6 07,000
சேலம்	4,52,000
நெல்லை	4 22,000
இராமநாதபுரம்	4,07,000
தென் ஆற்காடு	4,05,000
வட ஆற்காடு	3,09 000
செங்கற்பட்டு	2,96,000
தர்மபுரி	1,44,000
கன்னியாகுமரி	1,30,000
நீலகிரி	90,000

கேரளப் பரிசுச் சீட்டு

ரூ. 1 கோடி கிடைக்குமாம்!

திருவனந்தபுரம், நவ 7—

இந்த நிதியாண்டில் கேரள மாநிலத்தில் நடத்தப்பட்டுவரும் பரிசுச் சீட்டுக் குலுக்கல் மூலம் கேரள அரசுக்கு ஒரு கோடி ரூபாய் இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரையில் இந்தப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் மூலம் கேரள அரசுக்கு ரூ. 50 இலட்சம் மட்டுமே கிடைத்திருக்கிறது; இத்திட்டத்துக்கு நாள் ஆக ஆக நல்ல வரவேற்பு இருப்பதாகவும் தெரிகிறது.

இச்சீட்டுகள், சென்னை, மைசூர், மகாராட்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலும் விற்கப்படுகின்றன.

பொங்கல் விழா விளையாட்டுப் போட்டி

தமிழக அரசு ஒப்புதல்

கோவை, நவ. 8—

பொங்கல் திருவிழாவின்போது மாவட்ட -- மண்டல -- மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தலாம் என்று மாநில விளையாட்டுக் குழுவினரின் பரிந்துரைக்குத் தமிழக அரசு ஒப்புதல் தந்திருக்கிறது.

இப்போட்டிகள் பொங்கல் விழாவின்போது நடைபெறும் என்றும் இவற்றில் மாணவர்கள் அல்லாதவர்களதான் கலந்துகொள்ள வேண்டும் என்றும், தேவைப்படுமானால் மாணவர்களும் இப்போட்டிகளில் கலந்துகொள்ள வழிவகை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட -- மாநில விளையாட்டுக் குழுக்களால் நடத்தப்படும்.

சென்னை, நவ. 8—

இராஜஸ்தான் வறட்சி நிவாரணத்துக்கு உதவுமாறு தமிழக மக்களை, அந்த மாநிலத்தின் முதல்வர் மோகன்லால் சுகாதியா கேட்டுக் கொண்டுள்ளார்.

கா. சு. பிள்ளை நினைவு இலக்கிய விழா

குளித்தலை, நவ. 5—

தாகூர் சட்டப் பேராசிரியரும் தமிழ்ப் பெரும் புலவருமான பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை அவர்களது எண்பத்தோராவது பிறந்த நாள் விழாவும்—இலக்கியக் குழுவின் நான்காவது ஆண்டுவிழாவும் குளித்தலை கடம்பர்கோயில் பள்ளித் திடலில் அமைக்கப்பட்டிருக்கும் அலங்காரக் கொட்டகையில் நவ. 9, 10 ஆகிய இரு நாட்களிலும் நடைபெறுகிறது.

9—11—68 காலை 8-மணிக்கு இசை கலாநிதி சித்தலவாய் வேலு குழுவினரின் நாதசுர இசையுடன் விழா துவக்கமாகின்றது.

குன்றக்குடி அடிகளார் தலைமையில் கா.சு. பிள்ளை நூல்களான இலக்கிய வரலாறு, தமிழர் சமயம் ஆகிய நூல்களின் திறனாய்வை மகா வித்துவான் தண்டபாணி தேசிகர், கு. திருமேனி ஆகியோர் நிறைவு செய்கின்றனர்; கிராமக் கல்வி வளர்ச்சி இணை இயக்குநர் திரு. கு. வேங்கடசுப்பிரமணியம் துவக்கி வைக்கிறார்; திரு. இளங்கண்ணன் பங்கு பெறுகிறார்.

அன்று மாலை 'தமிழ் தந்த தகைமையாளர்' என்ற தலைப்பில் கவியரங்கத்துக்கு திரு. கவிஞர் முடியரசன் தலைமைதாங்கிட, 'தினமணி கதிர்' ஆசிரியர் 'சா. வி.' துவக்கி வைக்கிறார். திருவாளர்கள் பு. மனோகரன், தொல்காப்பியன், தாமரைச்செல்வன், க. குருநாதன், என். இராகவன், அருணா, அரங்க சீனுவாசன், தி. கு. நடராசன், சத்தியசீலன் ஆகியோர் பழம் பெரும் புலவர்களது வரலாற்றைக் கவிதையாக்கித் தருகிறார்கள்.

10—11—68 காலை 9-மணியளவில், 'வாழவைப்பது பண்பா? பாசமா?' என்ற கருத்துள்ள பட்டிமன்றத்துக்கு திரு. கா. அப்பாதுரையார் தலைமை வகிக்க—திருச்சி வானொலி இயக்குநர் திரு. எம். எஸ். கோபால் துவக்கிவைக்கிறார்; திருவாளர்கள் சோ. சத்தியசீலன், இராதாகிருட்டிணன், திருமாவளவன்மதி, அ. சம்பந்தமூர்த்தி, தி. கு. நடராசன், அருணா, பூமிநாதன், சொல்விளங்கும் பெருமாள், மா. கந்தசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் பங்குகொள்கின்றனர்.

மாலை 5-மணிக்கு இலக்கிய அரங்கு, திரு. ஔவை துரைசாமி தலைமை தாங்க—திரு. தமிழ்வாணன் துவக்கிவைக்கிறார்; திருவாளர்கள் கோவிந்தன் (சட்டமன்றத் துணைத் தலைவர்), எஸ். எம். டயசு எம்.ஏ., அமுதமொழி சாமிநாதன், கோவை க. இரத்தினம், மீ. சு. இளமுருகு பொற்செல்வி, திருமதி எயினி லாரன்சு ஆகியோர் பங்கு பெறுகின்றனர்.

இரவு 9 மணிக்கு திரைப்படப் பின்னணிப் பாடல் புகழ் திருமதி டி. எஸ். பகவதி குழுவினரின் தமிழிசை அரங்கு நடைபெறும்; திருவாளர்கள் பெ. சௌந்திரபாண்டியன் எம்.எல்.ஏ., கே ஆர். சபாபதி, வ. உ. சி. சுப்பிரமணியம் முதலியோர் பங்குபெறுவர்.

ஔவை நூல்களைத் திறம்பட ஆராய்ந்த அமுதமொழி சாமிநாதன் அவர்கட்கு இலக்கியக் குழுச் சார்பில் 'நல்அவ்வை' எனும் பட்டப் பட்டயம் வழங்கப்பெறும்.

"திருக்குறள் போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்" என்று அமைப்பாளர் இளமுருகு பொற்செல்வி அறிவிக்கிறார்.

குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை!

சென்னை, நவ. 6—

"பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலம் பெற்றுத் தாயகம் திருப்பிய மகிழ்ச்சியின் அடையாளமாக இன்றுமுதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குழந்தைகட்கு இலவச மருத்துவச் சிகிச்சை செய்ய முடிவு செய்துள்ளோம்"

என்று, சிந்தாதிரிப்பேட்டை வெங்கடேச கிராமணி தெருவிலுள்ள குரு சித்த வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் நடராசன் அறிவிக்கிறார்.

சேலம் நகராட்சி

அலுவலர்களுக்கு வீடு கட்டித் தர தீர்மானம்

சேலம் நகராட்சி கூட்டம், தலைவர் திரு. ஆர். இராமகிருஷ்ணன் தலைமையில் 31—10—68-ல் நடைபெற்றது; அவ்வமயம், சேலம் நகரில் சில திரைப்படக் கொட்டகைகளில் சுகாதார வசதிகள் இல்லை என்றும், சிறுநீர் கழிக்கும் இடங்களை மோசமாக வைத்திருப்பதாகவும், சுகாதார அதிகாரி பார்வையிட்டு உடன் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கழக உறுப்பினர்களான ஏ. மாரியப்பன், எஸ். மெய்யப்பன் ஆகியோர் கூறினர்.

நகராட்சி அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் --- பள்ளி ஆசிரியர்கள் --- மற்றுமுள்ள ஊழியர்கள் ஆகியோரில் வீடில்லாதவர்களுக்கு வீடு அமைத்து வாடகைக்கு விடலாமெனவும், இதனால் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வசதி ஏற்படும் என்றும், மேலும் நகராட்சிக்கு வருமானமும் கிடைக்குமெனவும், ஆகவே நமது நகராட்சி எல்லைக்குட்பட்ட நமது நிலத்திலும் புறம்போக்கு நிலங்களை கலெக்டரைக் கேட்டு வாங்கியும்வீடுகளைஉடனடியாக அமைக்க ஏற்பாடுகள் செய்யலாமெனவும் பி. எஸ். மாணிக்கம் (தி. மு. க.) கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

பரவுமென அஞ்சப்பட்டது

கடும் முயற்சியால் கட்டுப்படுத்தப்பட்டது

அம்மை நோயை ஒழிக்கும் முயற்சியாக சென்ற ஆகஸ்டு மாதம் வரையில் சுமார் 9.75 கோடி முதல் தடுப்பு ஊசிகளும், 53 கோடி மறு தடுப்பு ஊசிகளும் குத்தப்பட்டன.

வீட்டுக்கு வீடு சென்று 'ஊசி குத்தாமல்' விட்டுப் போனவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கும் தடுப்பு ஊசி குத்துவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

1964-ல் 40,265 பேருக்கு அம்மைநோய் ஏற்பட்டது; 1965ல் 33,402 பேர்; 1966-ல் 32,616 பேர்.

1967-ல் இந்நோய் அதிகரித்ததைக் கண்டு, 1968-ம் ஆண்டில் அது பெருவாரியாக பரவக்கூடும் என்று அஞ்சப்பட்டது; ஆனால், அம்மை நோய் ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்திய தன் பயனாக அதன் கடுமை கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை 22,000 பேருக்கு இந்த நோய் ஏற்பட்டது -- இதன் விளைவாக 5000 பேர் உயிரிழந்தனர்; சென்ற ஆண்டு இதே காலத்தில் 68,000 பேருக்கு அம்மைநோய் ஏற்பட்டது -- 15,000 பேர் உயிர் இழந்தனர்.

இரவல் இருதய அறுவைச் சிகிச்சை

இரஷ்யாவின் முதல் முயற்சி வெற்றி பெறவில்லை?

மாஸ்கோ, நவ. 8—

இரஷ்யாவில் முதன் முதலாக இரவல் இருதய அறுவைச் சிகிச்சையை இராணுவ டாக்டர்கள் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இரவல் இருதயம் பொருத்தப்பட்ட 25 வயதுள்ள பெண்மணி 36 மணி நேரத்திற்குப் பிறகு இறந்துவிட்டார்.

லெனின்கிராடில் கடந்த திங்கட்கிழமையன்று இராணுவ டாக்டர்கள் அடங்கிய குழு இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தது.

இந்தியால் பிரியவிருக்கும் இந்தியா

மீண்டும் சீன வாலாட்டுமா?

எல்லைப் பகுதியில் எச்சரிக்கை நடவடிக்கை

ஷில்லாங், நவ. 8—
அண்மையில் நேபா எல்லையின் வடக்குப் பகுதியில் சீனப் படைகள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக அதிகார பூர்வமான வட்டாரங்கள் கூறின.

இந்தச் சீனப் படைகளின் நடமாட்டம் பற்றி இந்திய இராணுவ அதிகாரிகளை கிழக்கு வட்டாரத் தளபதி லெப். ஜெனரல் மானக்ஷா எச்சரித்தார்.

எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராகவும், முன்னெச்சரிக்கையுடனும், விழிப்புடனும் இருக்கும்படி இராணுவத்தினரைக் கேட்டுக்கொண்டார்.

எல்லைப்புறத்தில் சீனப் படைகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதைக் கருதி எல்லை நெடுகிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதைக் குறித்து மூத்த இராணுவ அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

அசாம் எல்லையில் இராணுவ நடவடிக்கை

படை பலத்தை பாகிஸ்தான் பெருக்குவதாகத் தகவல்

ஷில்லாங், நவ. 8—
அசாமை ஒட்டியுள்ள கிழக்குப் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் அசாதாரணமான இராணுவ நடவடிக்கைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கரீம்கஞ்சுக்கு எதிரில் போக்ராம் என்ற இடத்தில் உள்ள கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கிப் படையை, பாகிஸ்தான், புதிய பலம் கொண்டுவந்து பலப்படுத்தியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இதேமாதிரி சில்ஹெட் மாவட்டத்தைச் சேர்ந்த அகாலியாவுக்கு அருகில் உள்ள சிவாஜி கிராமத்துக்கும் கோமிலா மாவட்டத்திலிருந்து புதிய படை பலத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் படைகள், கச்சா மாவட்டத்தில் சுடர் கண்டிக்கு எதிரே காஜுகூடிக்கு அருகில் அகழிகள் வெட்டி -- புது பங்கர்களும் அமைத்து வருகின்றனவாம்.

விளைவை எண்ணிப் பார்க்கும் நேரம் நெருங்கிவிட்டது!

'கிணற்றுத் தவளை'களைப் போல் தென் மாநிலங்கள் வாழ இயலாது

முனைந்து செயலாற்ற மூன்று யோசனை

"இந்தி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள், இன்னும் 5 ஆண்டுகளில் எல்லாப் பாடங்களுக்கும் இந்தியைப் பாட மொழியாக ஆக்கிவிடும் என்று எதிர்பார்க்கலாம்; இதைத் தொடர்ந்து, அங்கே இந்தியையே நிர்வாக மொழியாகவும் ஆக்கிவிடுவார்கள்; இந்தி மாநிலங்கள் என்ன செய்ய வேண்டும் -- என்ன செய்யக்கூடாது என்பதைக் கூற நமக்கு உரிமை இல்லை; ஆனால் இதன் விளைவுகள் நம்மை எப்படிப் பாதிக்கும் என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்க நமக்கு உரிமை உண்டு; அது நமது கடமையும்கூட!

"வட இந்தியாவை இந்தி மாநிலங்களே பெரிதும் ஆக்கிரமித்துக்கொண்டு இருப்பதனாலும், தெற்கில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் இந்தி பேசாத மாநிலங்களாக இருப்பதனாலும், இன்றைய இந்தியா, 'இந்தி பேசும் வடக்கு' என்றும், 'இந்தி பேசாத தெற்கு' என்றும் பிளவுபட்டுக்கொண்டே போகிறது!

"இந்தி மாநிலங்களின் போக்கினால் வடநாடு முழுவதும் இந்திமயமாகப் போகிறது; தென் மாநிலங்கள் இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கப்போவதில்லை; அவைகளும் தத்தம் மொழியைக் கல்லூரிப் பாட மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் ஆக்கிடத் துவங்கும்; இதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"இந்தி, இந்திய அரசின் ஆட்சி மொழியாக இருப்பதால், அவர்கள் இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் சென்று வேலை வாய்ப்புக்கள் பெற வசதி இருக்கும்; ஆனால் தென் மாநிலங்களில் உள்ளவர்கள், தமது மாநிலத்தை விட்டு வெளியே செல்ல முடியாமல் கிணற்றுத் தவளைகள்போல வாழ நேரிடும்"

என்ற கருத்துக்களை, 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் வெளியிட்டுள்ள வாசகர் ஒருவர், இதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க நம்முன் உள்ள மூன்று வழிகளையும் கூறியுள்ளார்; அது வருமாறு :—

1. தென்னிந்தியாவில் உள்ள நாமும் இந்தியை, இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளலாம்.

   [பிரச்சினையைத் தீர்க்க இந்த வழி உதவப்போவதில்லை; ஏனெனில், தெற்கு இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கப் போவதே இல்லை.]

2. தென் மாநிலங்களும் ஏதாவது ஒரு மொழியைத் தமக்குள் பொது மொழியாக வைத்துக் கொள்ளலாம்.

3. நிர்வாக – கல்வித் துறைகளில் ஆங்கிலத்தை இன்றுள்ளதுபோல அப்படியே தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

மேற்படி மூன்று வழிகளைக் கூறியுள்ள அவர், 'இன்றைய நிலையில், மூன்றாவது வழியே சிறந்தது' என்று கூறியிருக்கிறார்.

நாகாலாந்தில் இந்தியத் தளபதி

கலகக்காரர்களைத் தடுக்க நடவடிக்கை

ஷில்லாங், நவ. 8—
கலக நாகர்கள் தலைமையில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைத் தொடர்ந்து அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிய, இந்தியப் படைத் தளபதி ஜெனரல் குமாரமங்கலம், அவசரமாகக் கோகிமாவுக்கு வந்தார்; இராணுவ அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

சீனாவிலிருந்து கொரில்லாப் பயிற்சி பெற்று வந்துள்ள 1,500 நாகா கலகக்காரர்களுடன், நாகாலாந்தில் நுழைவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் கலகக்காரர் தளபதி ஜோவு அங்காமி புகுந்துவிடாமல் தடுக்கச் செய்துள்ள தனிப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஜெனரல் குமாரமங்கலம் பார்வையிட்டார்.

நாகாலாந்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ரீதியில் சீனாவிலிருந்து பயிற்சி பெற்று வந்துள்ள இந்தக் கொரில்லாக்களை நாகாலாந்துக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டியது அவசரமும் அவசியமுமாகிறது; எனவே நாகா -- பர்மா எல்லையில் தனிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜெனரல் குமாரமங்கலம் முன்னணிப் பகுதிகளிலிருந்து திரும்பிய பின்பு இராணுவத்தின் இரகசியப் பிரிவைச் சேர்ந்த முதிய அதிகாரிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தினார்.

தளபதி குமாரமங்கலம் கோகிமாவில் தங்கி, நாகாலாந்து முதலமைச்சர் அங்காமி, மற்ற அமைச்சர்கள், மாநிலத் தலைமைச் செயலாளர், போலீசு இன்ஸ்பெக்டர் - ஜெனரல் ஆகியோருடனும் கலந்தாலோசனை செய்தார்.

(3-ம் பத்தித் தொடர்ச்சி)

இந்தியா, சிக்கிம், பூட்டான் அரசாங்கங்களின் நன்றியை ஜப்பான் அரசாங்கத்துக்குத் தெரிவிக்குமாறு அமைச்சர், தூதரைக் கேட்டுக்கொண்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் சுற்றுப்பயணம்

நவ. 9 காலை 7-45 மணி: மதுரை; 9-மணி: சங்கரநாதம் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டுதல் (சாத்தூர் வட்டம்); 11-30 மணி: சாத்தூர்—நகர ஊராட்சியின் சாக்கடைத் திட்டத்தைத் துவக்கிவைத்தல்; மாலை 3-30 மணி; சிவகாசி—விவசாயக் கிடங்கைத் திறந்துவைத்தல்; 4-30 மணி: தாயில்பட்டி—வரவேற்பு; 5-மணி: சுப்பிரமணியபுரம்—உயர் மட்ட நீர்த் தொட்டித் திறப்பு விழா; 5-30 மணி: மாடத்துப்பட்டு—வரவேற்பு; 6-மணி; வேம்பக்கோட்டை—விவசாயக் கிடங்குத் திறப்பு விழா; இரவு 7-மணி: துலுக்கண்குறிச்சி—ஊராட்சி வரவேற்பு; 7-30 மணி: குகன்பாறை—ஊராட்சி வரவேற்பு; 8-மணி: சங்கரபாண்டியபுரம்—ஊராட்சி வரவேற்பு; 8-30 மணி: ஏழாயிரம் பண்ணை—கூட்டுறவு சங்கக் கடை—வரவேற்பு; 9-மணி: பொதுக் கூட்டம்; 9-30 மணி: சாத்தூர்—பொதுக்கூட்டம்.

நவ. 10 காலை 10-மணி: மதுரை—மாநில நீதித் துறை அதிகாரிகள் 3-வது மாநில மாநாட்டைத் திறந்துவைத்தல்; மாலை 6-மணி: ஆதலை—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; இரவு 7-30 மணி: வரகனூர்—திருப்பரங்குன்றம் கால் நடை மருத்துவமனை கால்கோள் விழா; 9-மணி: அவனியாபுரம்—பொதுக்கூட்டம்.

நாடு முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய திருட்டு

இரத்தினங்கள் -- வைரங்களைக் களவாடிய நபர் கைது

ஐதராபாத், நவ. 8—
டில்லி தேசியப் பொருட்காட்சியிலிருந்து விலையுயர்ந்த பண்டைக் கலைப் பொருள்கள், இரத்தினங்கள், வைரங்கள், குப்தர் காலத்திய தங்க நகைகள், ஆறாவது நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட தங்க நாணயங்கள் ஆகியவற்றைத் திருடிய நபர் செவ்வாய்க்கிழமையன்று இரவு ஐதராபாத் போலீசாரால் கைது செய்யப்பட்டான்.

இந்தத் திருட்டு நாடு முழுவதிலும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்ற அக். 25-ம் நாள் இரவு இத்திருட்டு நடந்தது.

திருடிய நபரின் பெயர் வி. யாதகிரி; வயது 27. இவன் ஒரு முன்னாள் கைதி; பல திருட்டுகள் சம்பந்தமாக ஆக்ரா, டில்லி போலீசாரால் தேடப்பட்டு வந்தவன்.

திருடப்பட்ட பொருள்கள் அனைத்தும் டில்லியிலிருந்து 20-மைல் தூரத்தில் ஒரு மயானத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன; அவை தோண்டி எடுக்கப்பட்டன.

"திருடனைக் கண்டுபிடிப்பதற்கான தகவல் கொடுப்போருக்கு ரூ 25,000 வெகுமதி அளிக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

நாடெங்கும் சந்தேகத்தின்பேரில் சுமார் 600-நபர்கள் போலீசாரால் விசாரிக்கப்பட்டனர்.

கல்கத்தாவில் சுமார் நான்கு இலட்சம் விரல் ரேகைகளும், டில்லியில் 30,000 விரல் ரேகைகளும் திருட்டு நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட விரல் ரேகை அடையாளங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.

ஜப்பானின் பேருள்ளம்

வங்க மக்களுக்கு உதவ நன்கொடை

மேற்கு வங்காளத்திலும், பூட்டானிலும், சிக்கிமிலும் அண்மையில் வெளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஜப்பான் நாட்டு அரசு முறையே 10,000 அமெரிக்க டாலர், 2,000 அமெரிக்க டாலர், 2,000 அமெரிக்க டாலர்களுக்குச் சமமான தொகையை வழங்கியிருக்கிறது.

இந்தத் தொகைகளுக்கான 'செக்'குகளை இந்தியாவிலுள்ள ஜப்பானியத் தூதர், வெளிநாட்டுத் துறை துணையமைச்சர் பி. ஆர். பகத்திடம் வழங்கினார்.

(1-ம் பத்தி பார்க்க)

நடக்க இருப்பவை

10--11--68

சிவகாசி

சௌந்திரபாண்டியனர் நினைவு மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மணிகட்டி ஊரணித் திடலில்; தலைவர்: எஸ். எம். பொன்னுசாமி; பேசுவோர்: கேரள சுந்தரம், ஏ. துரைக்கண்ணன், சி. பெ. குருசாமி, வே. கருணாகரன், கா. மு. மதார், க. மாரியப்பன், எம். எஸ். தங்கமணி.

திருவாரூர்

6-வது வட்ட தி. மு. க. சார்பில், மாலை 6 மணிக்கு கீழவீதி வடகோடியில்; தலைவர்: கார்மேகம்; பேசுவோர்: அறிவெழில், இரா. விசயராகவன், கோ. பரமசிவம், மு. அப்துல்லா.

கோபி

கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு புதுப்பாளையம் காமாட்சியம்மன் திடலில்; தலைவர்: ஜி. ஆர். பழனியப்பன்; பேசுவோர்: சே. அ. இராசமாணிக்கம், செ. அரங்கநாயகம், இரா. மோகன், எஸ். எம். பழனியப்பன், ஜி. பி. வெங்கிடு, க. பெ. துரை, பி. ஆர். கே. சாமி, பி. பி. சீனிவாசன்.

வேதாரண்யம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு இராஜாஜி பூங்காவில்; தலைவர்: ச. வேதரத்தினம்; பேசுவோர்: எஸ். கஸ்தூரி, என். சோமசுந்தரம் எம்.எல்.ஏ., சிவ. கனகசுந்தரம், ப. முருகு, இரா. சுந்தரராசன்.

குடந்தை

பெருநகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மேலக் காவிரி பாலத்தருகில்; தலைவர்: வி. சின்னத்தம்பி; பேசுவோர்: அமைச்சர் சாதிக் பாட்சா, மன்னை ப. நாராயணசாமி, இரா. செழியன் எம்.பி., எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., ம. கோ. மணி, எஸ். ஆர். இராதா எம்.சி.

வள்ளியூர்

எம். ஜி. ஆர். படிப்பகம் மூன்றும் ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு திருவள்ளுவர் கலையரங்கில்; தலைவர்: ஆ. நாராயணன்; பேசுவோர்: சி. தமிழரசி, களந்தை ஜின்னா, அலி சேக் மன்சூர், இராதா சங்கர், ஆ. குமரேசன், ம. செங்குட்டுவன், சுப்பிரமணியம், இலக்குமணன் மாலை 3 மணிக்கு ஊர்வலம் நடைபெறும்.)

குழுக் கூட்டங்கள்

மாயூரம்

"நகர தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 10—11—68 காலை 9-மணிக்கு கூறைநாடு பாசிக் கடைத் தெரு க. சுப்பிரவேலு இல்லத்தில், என். கிட்டப்பா எம்.எல்.ஏ. தலைமையிலும் -- வட்டச் செயலாளர் இரெ. ஜோசப் எம்.சி. முன்னிலையிலும் நடைபெறும்" என்று நகரச் செயலாளர் அ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

மதுரை

"44-வது வட்டார தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 10—11—68 காலை 10-மணிக்கு சந்திரா ஆரம்பப் பள்ளியில் நடைபெறும்" என்று எம். எம். முத்தரசு அறிவிக்கிறார்.

நெய்வேலி

"மந்தாரக்குப்பம் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் 10—11—68 மாலை 7-மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் எம். ஏ. சப்பார் அறிவிக்கிறார்.